# பாதுகாவலன்

PATHUKAVALAN


## தவக்கால கல்வித் திட்டம்

தபசுகாலத்தல் மீண்டும் ஒருமுறை நன்லபயல ஊற்நால இ க்கமுள்ள தேவல டப திரும்பி, எமது தன்னலத்தை மன்னித்து, புதிய இதயத்தையும, புதிய ஆவியையும் தரும்படி கேட்போமாக. நாம் கிறிஸ்துவோடு ஒன்றுபட்டு அவர் ஏழைசளுடன் கொண்டுள்ள முழு ஒருமைப்பாட்டுடன் நாமும் இணையும வழிவகைகளைப் பற்றி ஆராய்வது நலம். — திருத்தந்தை


மலர்: 117 இதழ் : 2 01–3–1991 ( மார்ச். 1 — மார்ச். 15 ) இலங்கையின் ஓரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50


## வளைகுடாப் போரில் ஈடுபட்டுள்ள நேசநாடுகளின் ஆயர் பேரவைத் தலைவர்களுடன் மார்ச் 4, 5 இல் வத்திக்கானில் அமைதிக்கான முயற்சி

# போரினால் பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பு

போரானது கண்மூடித்தனமான முறையில் பல அப்பாவிப் பொதுமக்களைப் பாதிக்கின்றது என வளைகுடாப் போரைக் கண்டித்து திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் மன வேதனையைத் தெரிவித்தார்.

''போரானது பலரை அப்போரில் ஈடுபடுத்துவதோடு கண்மூடித்தனமான முறையில் பொதுமக்களையும் பாதிக்கிறது. நடைபெறுகின்ற விமானத் தாக்குதல்கள் பற்றிய செய்திகள் இவ் உண்மையை வலியுறுத்துவதாகவுள்ளன'' என வளைகுடாப் போர் பற்றி சென்ற மாதம் 20 ஆம் திகதி திருத்தநதை வத்திக்கானில் நடைபெற்ற தமது மூவேளைச் செப உரையின்போது குறிப்பிட்டார்.


(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)


## சிதைந்த நிலையில் அல்பீனியா

தனிமனிதன் முறையான இடத்தைப் பெறுதல் அவசியம் எனவும் திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் அண்மையில் தம்மை சந்திக்க வத்திக்கான் வந்திருந்த அல்பீனிய குரு மறைத்திரு சைமன் ஜீவானியை தனிப்பட்ட விதத்தில் வரவேற்று அவருடன் உரையாடினார். அல்பீனிய திருச்சபை கடந்த பல ஆண்டு காலமாக அரசால் தடை செய்யப்பட்டிருந்தது. அல்பீனியாவில் தேவாலயங்கள், குருமடங்கள், மறைப்பணி நிலையங்கள் என அனைத்து திருச்சபை நிறுவனங்களும் சிதைந்த நிலையில் இருப்பதாகவும் அந்த நிறுவனங்களைப் புதுப்பிப்பதற்கு நிதி உதவி கோரியே தாம் வத்திக்கான் வந்திருப்பதாகவும் மறைத்திரு. சைமன் ஜீவானி தெரிவித்தார்.

## திருத்தந்தையின் புதிய சுற்றுநிருபம்

(யூக்கன் செய்தி)

''ஓர் புதிய நற்செய்திப் பணியிலும், பல நாட்டு மக்களுக்கு நற்செய்தியைப் பரப்புவதிலும், திருச்சபையின் அனைத்து சக்திகளையும் ஈடுபடுத்தவேண்டிய காலம் வந்துவிட்டது. இறைவன் நற்செய்திக்கு ஒரு புதிய வசந்தத்தை ஏற்பாடுசெய்கிறார்.''

இவ்வாறு ''மீட்பரின் பணி'' என்னும் தமது புதிய சுற்றுமடலில் கூறுகின்ற திருத்தந்தை ஒவ்வொரு விசுவாசியையும், ஒவ்வொரு நிறுவனத்தையும், சகல மக்களுக்கும் கிறிஸ்துவை அறிவிக்குமாறு அழைக்கிறார்.

மேலும் அவர் தமது திருமடலில் கூறுவதாவது:

''மனுக்குலத்தின் வரலாற்றில் ஏற்பட்ட எத்தனையோ பாரிய மாற்றங்கள் திருச்சபையின் மறைபரப்பு இயக்காற்றலைத் தூண்டியுள்ளன. தூயஆவியால் வழிநடத்தப்பட்ட திருச்சபையானது பெருந்தன்மையோடும், பெரும் இலட்சியங்களோடும் அதற்குப் பதிலளித்துள்ளது.

இன்று திருச்சபை இந்த அறைகூவலை ஏற்று புதிய மக்கள் மத்தியிலும், ஏற்கெனவே நற்செய்தியைப் பெற்ற மக்கள் மத்தியிலும் புதிய இலக்குகள் நோக்கித் தன்னைச் செலுத்துதல் வேண்டும்.''

## ஆலயத்தில் உயிரிழப்பு

லக்கினோ தேவாலயத்தில் விபூதிப்புதன் அன்று நடைபெற்ற இறைவழிபாட்டின்போது ஏற்பட்ட சனநெருக்கலில் சுமார் 42 பேர் உயிரிழந்தனர், 55 பேர் காயமடைந்தனர் எனவும் காயமடைந்தவர்கள் முதலில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் எனவும் செய்திகள் கூறுகின்றன.

## ஆயரின் திருமுகம்

திருமலை — மட்டுநகர் ஆயர் தம் மக்களுக்கு எழுதிய திருமுகத்தை வத்திக்கானிலிருந்து வெளியாகி சர்வதேசமெங்கும் அனுப்பப்படும் ஆங்கிலப்பத்திரிகை இவ்வாண்டு ஜனவரி 21 இதழில் பிரசுரித்துள்ளது.

''தற்கால சூழ்நிலையில் கிறிஸ்தவ நிலைப்பாட்டை இலங்கை ஆயர் நோக்குகிறார்'' என்ற தலைப்பில் ஆயரின் திருமுகத்தின் பெரும்பகுதி பிரசுரிக்கப்பட்டது. வாசகர்களின் நன்மை கருதி அதனை நாம் உள்ளே மொழிபெயர்த்துத் தருகிறோம்.

## இலவச விவிலியம்

ரஷ்ஷிய நாட்டுத் திருச்சபைக்கு சுமார்40,000விவிலிய பிரதிகள் சர்வதேச விவிலியசங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்டது.இதற்கானமொத்த செலவு 2லட்சத்து 75000ரூபா. இந்தச் செலவை சர்வதேச விவிலியக்கழகம், பால்டிக்திருச்சபை மற்றும் சில கிறிஸ்தவ நிறுவனங்கள் ஏற்றன.

## தவக்காலம் ஒப்புரவின் காலம்

திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் வத்திக்கான் புனித சபீனா தேவாலயத்தில் விபூதிப்புதன் அன்று ஆயர்கள் குருக்களுடன் இணைந்து சிறப்புத் திருப்பலி நிறைவேற்றினார். திருப்பலியின்போது தபக்காலம் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும், இறைவனோடும், தன் அந்நியனோடும் ஒப்புரவாகும் காலம் எனவும் குறிப்பிட்டார்.

## இந்திய அகதிகள் திரும்ப யப்பான் உதவி

வளைகுடா போர் காரணமாக அகதிகளாகி ஜோர்தான் தலைநகர் அம்மானில் 180 இந்தியர்கள் தாயகம் திரும்ப உதவும் வகையில் யப்பான் ஆயர் பேரவை ஜோர்தான் ஏலைன்ஸ் போயின் 707 விமானமொன்றை அமர்த்தி 180 இந்தியர்களும் இந்தியா போய்ச்சேர உதவியது என யப்பான் சமூகத்தொடர்பு நிலையம் தெரிவித்துள்ளது. 180 இந்திய அகதிகளும் பெப்ரவரி 13 ஆம் நாள் அம்மானில் இருந்து புறப்பட்டு பெப்ரவரி 14 ஆம் நாள் இந்தியா சென்றடைந்தனர்.

## குருத்துவ பொன்விழா



குருத்துவ வாழ்வில் 50 ஆண்டுகள் நிறைவுகாணும் அருள் திரு. ஜே. ஏ. கருணாகரர் அடிகள் 1916 செப்ரெம்பர் 11 ஆம் திகதி இளவாலையில் பிறந்தார். 1935 முதல் உரோமாபுரியில் மெய்யியல், இறையியல் கல்விகளைக்கற்று அங்கு 1941 பெப்ரவரி 24 இல் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார்.

1944 வரை 2 ஆம் உலகப் போர் காரணமாக நாடு திரும்ப முடியாதிருந்தபடியால் உயர்கல்வியை மேற்கொண்டார். 1945 இல் கடல், தரை மார்க்கமாக இரண்டு மாதம் பயணம் செய்து நாடு திரும்பினார்.

1945 இல் நல்லூர் மீசாமில் சுவாமி ஞானப்பிரகாசரின் கீழ் தனது பணியை ஆரம்பித்தார். 1948 முதல் 1951 வரை மன்னார் புனித சவேரியார் கல்லூரி அதிபராகவும், 1951 முதல் 1954 வரை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபராகவும், 1954 முதல் 1957 வரை யாழ். பத்திரிசியார் கல்லூரி உதவி ஆசிரியராகவும், 1957–1958 இல் பேசாலை- தலைமன்னார் பதில் பங்குத்தந்தையாகவும் 1959 முதல் 1963 வரை கரவெட்டி திரு.இருதயக் கல்லூரி அதிபராகவும் பணி புரிந்தார்.

பின் ஏழாலை, நல்லூர், மிருசுவில், சாவகச்சேரி பங்குகளின் பங்குத்தந்தையாகப் பணியாற்றி சென்றவாண்டு ஓய்வு பெற்று தற்போது ஆயர் இல்லத்தில் தங்கியுள்ளார்.

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

## எம்கருத்து

### "சாவின் வித்து"

ஜனவரி 15 இல் ஆரம்பமான வளைகுடாப் போரானது 40 நாட்களில் தரைப்போராக வெடித்த போது, திருத்தந்தை 2ஆம் அருள்சின்னப்பர், இப் போரை ''சாவின் வித்து'' என வர்ணித்தார்.

வளைகுடாப் போர் வெடித்தபோது திருத் தந்தை, தாம் தமது சக்திக்குட்பட்ட அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்ட போதிலும் வளைகுடாப்போரைத் தடுக்க முடியவில்லை என்று கவலை தெரிவித்தார். இந்த யுத்தமானது இருதரப்பாருக்கும் கொண்டுவரவிருக்கும் அழிவுகள், இழப்புக்கள், வேதனைகளை எண்ணி தாம் பெரிதும் வருந்துவதாக திருத்தந்தை குறிப்பிட்டார்.

விமானத்தாக்குதல்களுக்கும் ராணுவ நடவடிக்கைகளுக்கும் மத்தியில் வாழுகின்ற வடக்கு—கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு, திருத்தந்தையின் வார்த்தைகளின் உட்பொருளை விளங்கிக்கொள்வது இலகுவானது.

ஈராக்கின் ஆக்கிரமிப்புக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட போரைக் கண்டித்துள்ள திருத்தந்தை, இப் போரின் ஆரம்பமானது சர்வதேச சட்டத்துக்கும், சர்வதேச சமூகத்துக்கும் ஏற்பட்ட பெருந் தோல்வி என்பதை எண்ணும்போது தனது கவலை இன்னும் பன்மடங்காகிறது என்று வர்ணித்தார் நாடுகளுக்கு இடையே ஏற்படுகின்ற பிணக்குகளுக்குப் போர் ஒரு போதும் தீர்வாகப் பயன்படவில்லை என்றும் பயன் படப்போவதில்லை என்றும் ஆணித்தரமாக வலியுறுத்திய திருத்தந்தை போர் ஒருபோதும் பிரச்சனைகளைத் தீர்க்காது என்றார்.

பிராந்தியத்தில் வாழும் எல்லாமக்களினதும், உரிமைகளையும், அபிலாசைகளையும் உணர்ந்துகொண்டு சர்வதேச சமூகமானது அதற்காக உழைக்கவேண்டிய தனது கடப்பாட்டைக் கண்டுகொள்ள ஒரு நாள்ப் போரின் அனுபவமே போதுமானது எனவும் திருத்தந்தை சுட்டிக்காட்டினார்.

ஜனவரி 15 இல் போர் துவங்கியவுடன் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ்சுக்கு திருத்தந்தை அனுப்பிய வேண்டுகோளில் 'ஆயுதப்பிரயோகமானது வேதனைக்கும், அழிவுக்கும் மட்டுமன்றி அத்துடன் ஏன் மோசமான அநீதிகளுக்கும் இட்டுச்செல்லாது என நாம் பாசாங்கு செய்ய முடியாது'' என்றார்.

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் குசைனுக்கு திருத்தந்தை அனுப்பிய வேண்டுகோளில், ''போரானது பெரிய அநீதிக்குரிய சூழ்நிலையை உருவாக்குவதோடு ஒருவன் தொடர்ந்தும் பலாத்காரத்தில் ஈடுபடத் தூண்டி ஈர்க்கக் கூடிய சக்திவாய்ந்தது. எனவே சமாதானத்துக்கான வழியில் துணிவுடன் காலடி எடுத்து வையுங்கள்'' எனக் கேட்டுக்கொண்டார்.

தரைப்போர் தொடங்கியபோது வளைகுடாப் போரின் பேரழிவுகள் பன்மடங்காவதை வலியுறுத்த திருத்தந்தை அதனை 'சாவின் வித்து' என வர்ணித்துள்ளார். மனித வாழ்வையும், வளமான வாழ்வையும் மையமாகக்கொண்டு பயன்படுத்தப்பட வேண்டிய மனித சக்தியும், தொழில் நுட்பமும், பொருளாதாரமும் மனித இன அழிப்பிற்குப் பயன்படுத்தப்படுவதால் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகளை உணர்ந்தே திருத்தந்தை இப்போரை ''சாவின் வித்து'' என வர்ணித்துள்ளார்.

வளைகுடாப்போரின் திருப்புமுனைகள் நம் மக்களை நமது நாட்டில் நிலவும் போரின் நிலைகளைப் பற்றியும் சிந்திக்க சந்தர்ப்பம் தருகின்றன. திருத்தந்தை கூறும் கருத்துக்கள் நம்மவர்க்கும் பொருந்தும் என்பது சொல்லாமலே விளங்கும்.

போரானது தொடர்ந்தும் போரில் ஈடுபடத் தூண்டுவதுடன், சாவுக்கு வித்திடுவது. மாறாக சமாதானமே நிலையான பலன் தருவது. எனவே அதற்காக அனைவரும் உழைப்போம்.

# பகையையும் வன்முறையையும் கைவிடுங்கள் — திருமலை - மட்டுநகர் ஆயரின் திருமடலிலிருந்து

வத்திக்கானிலிருந்து வெளிவரும் L'OSERVATORE ROMANO (ஒஸ்ஸவாத்தோறே றோமானோ) என்கிற பத்திரிகை திருமலை — மட்டுநகர் ஆயர் பேரருள்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தம் மக்களுக்கு விடுத்த திருவருகைக்கால திருமுகத்தின் பெரும் பகுதியை ஜனவரி 21 இதழில் பிரசுரித்தது. A Sri Lankan bishop reflects on the Christian stance in current situation என்ற தலைப்பில் வெளியான திருமுகத்தின் மொழிபெயர்ப்பு இது.

இன்று இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் வாழும் மக்கள் முன்னெப்போதுமில்லாத வகையில் உயிரிழப்பு, பொருளிழப்பு, தடுத்துவைப்பு, காணாமற் போதல், பசி, பஞ்சம் நோயாளருக்கு வைத்திய உதவியின்மை, பிள்ளைகளுக்குக் கல்வியின்மை போன்றவற்றால் எண்ணற்ற துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். அத்துடன் பல இனங்களையும், சமயங்களையும் சேர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் அமைதியிலும், சாதாரண நிலையிலும் தமது வீடுகளுக்குத் திரும்பும் நம்பிக்கையின்றி அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

எமது சகோதரர்கள் அவர்கள் எந்த இன, மதத்தைச் சார்ந்தவராயிருந்தாலும் அவர்களது வேதனை துயரங்களிலும், மனத்துன்பத்திலும் நாம் ஒவ்வொருவரும் பங்கு கொள்ளாமலிருக்க முடியாது. ''இந்த துன்பமெல்லாம் எப்போது ஒரு முடிவுக்கு வந்து சமாதானநிலை உண்டாகும்?'' என்பதுதான் இன்று எல்லோர் உள்ளத்திலும் எழும் வினாவாகும். இதற்கு ஒருவராலும் விடைகூற முடியவில்லை என்பதுதான் மிகத் துக்ககரமானதொன்றாகும்.

இந்நிலைமையை ஆராய்ந்து இத்துன்பத்தின் மூலகாரணம் எதுவென்று பார்த்தால், இத் தீங்குகளுக்கு அடிப்படையாக எத்தனையோ காரணங்கள் இருப்பது தெளிவாகும். அரசியல் சந்தர்ப்பவாதம், இனப்பகை, பிரச்சினைகளைத் தீர்க்க வன்முறையை வழியாகக் கொள்ளுதல் என்பவை அவற்றுட் சிலவாகும். குறுகிய இலக்கையும், இலாபத்தையும் கருதும் அரசியல் இன்றைய இக்கட்டான நிலைக்குப் பெரிதும் காரணமாயிருந்திருக்கிறது. மொழியின் பெயராலும், இனத்தின் பெயராலும், மதத்தின் பெயராலும் மக்கள் மக்களுக்கெதிராக எழுந்துள்ளனர். சிறுபான்மையினர் உரிமைகளைப் பெறுவதற்கு உரையாடல் ஆலோசனை, சமரச இணக்கத்தைவிட வன்முறை, ஆயுதப்போராட்டம், பயங்கரவாதமே ஒரே வழியாகக் கருதப்படுகின்றது.

இத்தகைய நிலைமையில் கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம் செய்யத்தக்கது யாது? இதற்கு விடை என்னவெனில், ஊழல், அநீதி, வறுமை, அடக்குமுறை,, பகைமை நிறைந்த உலகில் இறைவார்த்தையையும் அமைதி, உண்மை, பரிசுத்தம், நீதி, சகோதரத்துவம் போன்ற கிறிஸ்தவ மதிப்பீடுகளையும் விட்டுக்கொடுக்காமல் உறுதியாக நிற்கவேண்டியது அவசியம் என்பதாகும்.

நாம் தனிநபர்களாகவும், முழுத் திருச்சபையாகவும் சமாதானத்தின் கருவிகளாகவேண்டும். மெசியாவின் பிறப்பின் போது சமாதானமே அறிவிக்கப் பட்டது. ''இறைவனுக்கு மகிமை—பூமியில் சமாதானம்'' உயிர்த்தபின் அவரது பிரசன்னம் சமாதானத்தையே தருகின்றது. ''சமாதானத்தை உங்களுக்கு விட்டுச்செல்கிறேன் எனது சமாதானத்தை உங்களுக்குத் தருகிறேன்''

வெறும் போரற்ற நிலை சமாதானமன்று, சர்வாதிகாரத்தால் அதைக் கொண்டுவரவும் முடியாது. நீதியின் பலனேயாகும் (என 2ஆம் வத்திக்கான் சங்கம் கற்பிக்கின்றது, திருச்சபையின் அண்மைக்கால திருத்தந்தையரும், தலைவர்களும், ''சமாதானம் வேண்டுமென்றால் நீதிக்காக உழையுங்கள்'' என்ற 6ஆம் சின்னப்பரின் அழைப்பையே கூறிவந்துள்ளனர். ஆகவே சமாதானத்தை விரும்புங்கள். சமாதானத்துக்காக செபியுங்கள். இது ஒவ்வொரு கிறிஸ்தவனது கடமையும், அவசிய பணியுமாகும்.

**வன்முறையைத் திருச்சபை ஏற்க முடியாது**

சமாதானத்தைக் கொண்டுவரும் முயற்சியில் நாம் எல்லாவிதமான வன்முறையையும், பகைமையையும் தவிர்க்க வேண்டும் கிறிஸ்தவர்களென்ற மட்டில் நாம் எமது குடும்பத்திலும், பாடசாலையிலும், தொழிற்களத்திலும், கிராமத்திலும், சமூகச் சூழலிலும் நற்செய்தியின் புளிக்காரத்தைப் போல் செயற்படவேண்டும். அன்பிற்கு முதன்மை அளிப்பது ஒரு கிறிஸ்தவனை அகிம்சை வழியையும், ஏழைகள், இடம் பெயர்ந்தோர், வீடற்றோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவி புரிவதையும் விரும்பச் செய்கின்றது. மொழி, இனம், மதம் போன்ற எந்த மட்டத்திலாவது சகோதரனுக்கெதிரான பகைமைக்கோ இனவாதத்துக்கோ இடமில்லை என்பதை ஆணித்தரமாக எடுத்துக்கூற விரும்புகிறேன். ஓர் இலக்கு எவ்வளவு உயர்ந்ததாயினும் அதை அடைவதற்கு வன்முறையையும், அச்சுறுத்தலையும் கையாள்வதற்கோ, ஒருவர் மற்றொருவரின் உயிரைப் பறிப்பதற்கோ இடமில்லை. இவையனைத்தும் எமதாண்டவராகிய இயேசுக் கிறிஸ்துநாதரின் போதனைக்கு முரணானவையாகும்.



**நல்ல சமாரியர்**

தமது வீடுகளையும், உடைமைகளையும் இழந்து நிற்கும் சகல இன, மதங்களையும் சேர்ந்த எண்ணற்ற மக்களை நாம் மறந்துவிடலாகாது. இந்த வேளையில் நாம் அவர்களுக்கு நல்ல சமாரியர்களாக இருக்க வேண்டும்.

இன்று எம் கண்முன்னே வழியோரத்தில் காயமுற்ற அநேகரைக் காண்போம். குருவையும், லேவியனையும் போல் வழி விலகிச் செல்லாது, நல்ல சமாரியனைப்போல் காயமுற்றோருக்குச் சென்று உதவி அவர்களைக் காப்பாற்றுவோம். ''நீங்களும் அவ்வாறே செய்யுங்கள்'' இதுவே இன்று எம்மை எதிர்நோக்கும் அறைகூவல்.

நடைமுறையில் எல்லா மறைமாவட்டங்களிலும் திருச்சபைக்கு சமூகசேவை ஸ்தாபனங்கள் உள்ளன. இவற்றின் மூலம் திருச்சபை நீதி, அமைதி, மனித முன்னேற்றம் ஆகியவற்றுக்கான தனது பணிகளையும், பாதிக்கப்பட்டோருக்கு இரக்கச்செயல்களையும் மேற்கொண்டு வருகிறது. எமது மறைமாவட்டத்திலும் EHED என்னும் நிலையம் பிறநாட்டுக் கிறிஸ்தவர்களின் உதவியோடு தன்னாலானவற்றைச் செய்கின்றது. ஆனால் தேவை மிகுதியாக இருப்பதால் அனைவரையும் திருப்திப்படுத்துவது அசாத்தியமானது.

இவ்விதமாக ஸ்தாபனங்கள் வழியாக செய்யும் பணி போதுமானதன்று. நாம் ஒவ்வொருவரும் எம்மை ஒறுத்து வறியோருக்கு உதவுவது இதைவிட முக்கியமானது. ''பசியாயிருந்தேன், எனக்கு உணவளித்தாய்'' (மத் 25:35) இதுவே இறுதிநாளில் எமது சீடத்துவத்தை அளவிடும் அளவுகோலாகும். எம்மைச் சுற்றியுள்ள வறியவரில் கிறிஸ்துவை எம்மால் காணமுடிகிறதா?

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

வீட்டுக்கொரு பாதுகாவலன் உங்கள்பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

# ஆயர்களின் கூட்டுப்பண்பைக் காட்டும் ஆயர் மன்றங்கள்

பாரம்பரிய வழக்கப்படி திருத்தந்தை டிசம்பர் 20ஆம் திகதியன்று கருதினால்மார், ரோமன் கியூறியாவின் உறுப்பினர்கள் முதலியோருக்கு தமது நத்தார்ப் பேட்டியை அளித்தார். நத்தார் வாழ்த்துக்கள் பரிமாறப்பட்டன. அவ்வேளையில் திருத்தந்தை நிகழ்த்திய உரையின் சில பாகங்கள்.

ஒளியும் மகிழ்வும் பொருந்திய நத்தார் திருநாள் அண்மித்துள்ளது. அதனை நன்றியுணர்வுடன் கொண்டாட ஆயத்தப்படுத்துகிறோம். மனுமக்களை அண்டி வந்து தமது அன்பாலும், இரக்கத்தாலும் அவர்களை நிரப்ப விரும்பிய இறைவனது மீட்பின் மறைபொருளைக் கொண்டாடுகின்றோம். இந்த அன்பின் பிரசன்னத்தினது அடையாளங்களை மனுக்குலத்தின் பாதையில் காண்கிறோம்.

எமது திருச்சபையைப் பொறுத்த மட்டில் தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு நிகழ்ச்சியை குறிப்பாக நினைவு கூருகிறோம். இருபத்தைந்து ஆண்டுகளின்முன் 2ஆம் வத்திக்கான் திருச்சங்கம் நிறைவெய்தியது.

## இருபத்தைந்து ஆண்டுகளின்முன் 2ஆம் வத்திக்கான் திருச்சங்கம்

வரலாற்று முக்கியத்துவம் மிக்க இந்நிகழ்வின்போது தூய ஆவியினால் இயக்கப்பட்ட திருச்சபையானது எமது கால மக்களைச் சந்திக்க துணிவுடன் முன்னேறிச் சென்றது. சமகால மக்களுக்கு இலகுவாகப் புரியும்படியாக, ஆனால் உண்மையில் எவ்வித குறைபாடும் இல்லாது மக்களுக்குப் போதிக்க வேண்டிய அவசியத்தை அது உணர்ந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக, தான் கிறிஸ்துவின் ஒளியை இன்னும் முழுமையாகப் பரப்பக்கூடியதாக இருக்கும்படிக்கு ஓர் ஆழமான புதுப்பித்தல் அவசியம் என்பதைத் திருச்சபை உணர்ந்தது. இடையறாது புதுப்பிக்கும் முயற்சியானது கடினமாக இருப்பினும்அது திருச்சபைக்கு வளர்ச்சியைத் தந்ததென்பது நிச்சயம்.

இறைவன் இந்நூற்றாண்டில், குறிப்பாக அதன் பிற்பகுதியில் திருச்சபைக்கு அளித்துள்ள மகத்தான ஆன்மீக கொடைகளுக்காக உங்களோடு சேர்ந்து இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். சங்கத்தை நடத்தி ஊக்குவித்தவர்களான எனது முன்னோர்கள் 23ஆம் அருளப்பர், 6ஆம் சின்னப்பர் ஆகியோரை வணக்கத்துடன் நினைவுகூருகிறேன்.

## ஐக்கியத்தில் வளரவேண்டும்

மக்களின் மீட்புப் பாதையில் திருச்சபை சென்றுகொண்டேயிருக்கின்றது. இறை மக்கள் என்ற முறையில் மக்களுக்குப் பணி புரிந்து மீட்பர் கிறிஸ்துவில் பூரண ஒருமைப்பாட்டை நோக்கி அவர்களை இட்டுச் செல்லும் பொருட்டு தான் ஐக்கியத்தில் வளரவேண்டுமெனத் திருச்சபை உணர்கிறது. இந்த ஐக்கியம் 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் திருச்சபை இயலின் ஒரு மையக் கருத்தாகும் இன்று 25ஆண்டுகளின்பின் அதனை நோக்கி எமது கவனத்தைத் திருப்புவது என் கடமையெனக் கருதுகிறேன்.

பரமதிரித்துவத்தின் மூன்று ஆட்களுக்குமிடையேயுள்ள ஒன்றிணைவை விசுவாசிகள் மீது பொழிந்து அவர்களை ஒரே மக்களாக இணைக்கின்றனர்.

ஆகவே திருச்சபையானது விசுவாசத்திலும், திருவருட் சாதனங்களிலும், திருவாட்சி முறையிலும் ஒன்றிணைந்த ஓர் அன்பின் சமூகமாகத் தோன்றுகிறது.

ஆயர் மன்றம் திருச்சபையின் ஓர் உள் அமைப்பாகும். அது ஒன்றிணைவின் சிறந்த கருவியாக விளங்குகிறதென்பதில் ஐயமில்லை. திருச்சபையின் பல்வேறு அங்கத்தவர்களை ஒன்று சேர்ப்பதனால் ஆயர்மன்றங்கள் திருச்சபையின் ஐக்கியத்துக்கு அடையாளமாக இருக்கின்றன.

# பிளவு அழிவையே கொண்டுவரும்

இலங்கையின் 43வது தேசிய தினத்தையொட்டி வெளியிட்ட செய்தியில் ''ஒரு சுதந்திர நாடாக நாம் அடைந்துள்ள முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு இந்த ஞாபகார்த்தம் ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கிறது'' என கொழும்பு மறைமாவட்ட நிர்வாகியான ஆயர் ஒஸ்வால்ட் கோமிஸ் கூறியுள்ளார் மேலும் அவர் கூறியதாவது.

''எமது நாட்டிலுள்ள சகல இனமக்களும், குழுக்களும் கொலனி ஆட்சியிலிருந்து விடுபடுவதற்காகப் போராடிய போது, அரசியல், சமூக, பொருளாதார சுதந்திரமுள்ள ஒரு மக்களை நம்பிக்கையுடன் எதிர்நோக்கியிருந்தோம். இந்த இலக்கு அடையப்பட்டதா என ஆராய்வதற்கு இந்நாள் ஒரு நல்ல சந்தர்ப்பமாகும்.

எமது இன்றைய நிலையை நேர்மையுடன் நோக்கின் எமக்குப் புலப்படுவது. ஒரு பிளவுற்ற நாடு, உள்நாட்டுப் போராட்டங்களால் பொருளாதார வீழ்ச்சியுற்ற நாடு. மக்கள் முன்னேற்றத்துக்காக செலவிடப்பட வேண்டிய அரிய நிதியெல்லாம் போர் முயற்சிக்காக விரயமாக்கப்படுவது.

ஒரு மேலோட்டமான பார்வையே எமது நிலைமைக்குக் காரணமான அறிவீனத்தை வெளிப்படுத்துகிறது. பிளவு தான் எமது அழிவுக்குக்காரணம் என்பது வெளிப்படை. தீர்க்க நோக்குடன் ஒருமைப்பாடுள்ள ஓர் இலங்கையை உருவாக்க முயற்ச்சிக்காது அரசியல் இலாபம், இனவெறி, பொருளாதாரம், பேராசை, அநீதி ஆகியவற்றால் மக்களைப் பிளவுபடுத்தி, ஒருவருக்கெதிராக மற்றவரைத் தூண்டி விடுவதையே காண்கிறோம்.

இதனால் அடிப்படையான விடயங்களான வறுமையொழிப்பு, வேலைவாய்ப்பு, தேசிய அபிவிருத்தி போன்றவற்றில் ஈடுபட இவை தடையாயிருந்திருக்கின்றன.

கடந்த 43 வருட கால அனுபவம் எமக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்கப் போதுமானதாக இருக்கின்றது. அதாவது பிளவு அழிவையே கொண்டுவரும்.

ஆகவே கடந்த கால வேற்றுமைகளை குழிதோண்டிப் புதைத்துவிட்டு உண்மையில் எல்லோரும் சுதந்திரமாக, சமத்துவமாக வாழும் ஓர் இலங்கையைக் கட்டியெழுப்புவோமாக. தீவிரவாதங்களைத் தூண்டுவது நாட்டுமக்களின் வேதனையையே நீடிக்கும், சிலசமயம் முழு அழிவையும் கொண்டுவரலாம்.

## பகையையும்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

செபம்

இறுதியாக — இக்காலத்தில் நாம் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக, நம்பிக்கையின் சாட்சிகளாக விளங்குவோமாக. வன்முறையிலும், சஞ்சலத்திலும் சிக்கியிருக்கும் இப்பிரதேசத்தில் சமாதானத்தின் கருவிகளாக விளங்குவோமாக. எமது சமூகங்களுக்கிடையில் புகுந்துள்ள பகைமையை அகற்றுவோமாக.

எமது மறைமாவட்டத்தில் அன்புப்பணியில் ஈடுபட்டிருந்த போது உயிரிழந்த இரு குருக்களையும் உபதேசியாரையும் கவலையுடன் நினைவு கூருகின்றோம். மேலும் நாம் சில ஆலயங்கள், கன்னியர்மடங்கள் போன்றவற்றையும் இழந்துள்ளோம். சில முழுமையாகவும், சில அரைகுறையாகவும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே அண்மைக்கால உயிர், பொருள் இழப்புக்களில் திருச்சபைக்கும் பங்குண்டு.

அண்மைக்கால வன்முறைகளில் உயிரிழந்த அனைவரையும்- அப்பாவிப் பொதுமக்களையும், இரு தரப்புப் போராளிகளையும்— நினைவு கூருவோமாக. அவர்களது தியாகம் வீணானதாக இல்லாமல், இன, மொழி, மத தடைகளற்ற அன்பிலும், சகோதரத்துவத்திலும் இணைக்கப்பட்ட ஒரே மக்களாக ஒரு புதிய சமுதாயம் உருவாகட்டும்.

# 1991 திருச்சபையின் கோட்பாட்டின் ஆண்டு

புதுவருட தினத்தன்று திருத்தந்தை அருள் சின்னப்பர் புனித இராயப்பர் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். அவர் தமது திருவுரையில் 1991ஆம் ஆண்டு திருச்சபையின் சமூகக் கோட்பாட்டின் ஆண்டு எனப் பிரகடனம் செய்து, திருச்சபையின் முதல் நவீனகால ''சமூக'' சுற்றுமடலான 3 ஆம் சிங்காராயர் எழுதிய ''ரேறும் நொவாறும்'' என்னும் மடலின் நூற்றாண்டு ஞாபகார்த்தமாக ஓர் சுற்றுமடல் வெளியிடப்போவதாக அறிவித்தார்.

மோயீசன் சட்டப்படி பிறந்த எட்டாம் நாள் விருத்த சேதனத் திருச்சடங்கின்போது அவருக்கு இயேசு என்னும் பெயர் சூட்டப்பட்டது திருவழிபாட்டுக் காலத்தின்படி இது இயேசு பிறப்பின் எட்டாம் நாளும் புதுவருடமுமாகும். கிறிஸ்தவ காலக் கணிப்பின்படி இது கி. பி; 1991ஆம் ஆண்டாகும். அத்துடன் இன்று உலக சமாதான தினத்தையும் கொண்டாடுகின்றோம்.

ஆண்டுகள் கடப்பதும், காலம் மாறுவதும் உண்மையாயினும் புனித சின்னப்பர் குறிப்பிடும் ''காலத்தின் நிறைவு'' நிலையானது. இந்த நிறைவு கிறிஸ்துவின் மனித அவதாரத்தோடு தொடர்புடையது. (கலாத் 4;4—6)

## இயேசு — மீட்கும் இறைவன்

இதுவே மனிதனது காலத்தை இறைவன் தமது அளவையினால் நிர்ணயிப்பதைக் குறிக்கிறது. ''நிறைவு'' என்பது மனித ஆன்மாக்களிலும், உலகில் மனித வரலாற்றிலும் இறைவனின் செயற்பாட்டைக் குறிக்கின்றது. இறைவன் அனைத்து மக்களும் மீட்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார். குழந்தைக்கு இடப்பட்ட ''இயேசு'' என்னும் பெயரும் உலகை மீட்க வேண்டும் என்ற இறைவனின் திருவுளத்தையே காட்டுகின்றது; ''இயேசு'' என்பதன் பொருள் ''மீட்கும் இறைவன்'' என்பதாகும்.

மனித அவதாரம் என்னும் மறை பொருளில்தான் மனுக்குலத்தின் உன்னத அழைப்பு வெளிப்படுகின்றது. அதாவது அவர்கள் கிறிஸ்துவில் இறைவனது பிள்ளைகளாக அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த அழைப்பிலேதான் மனுக்குலத்தின் மறைபொருள் முழுமையாக வெளிப்படுகின்றது. மனிதப் பிறவி என்றால் என்ன? மனித பிறவியின் நோக்கமென்ன? என்னும் முக்கிய கேள்விக்கு இதிற்தான் விடைகிடைக்கின்றது.'அப்பா! பிதாவே!'' இறைவனின் தந்தைமை மிக எளிமையான ஆனால் ஆழமான விதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இவையனைத்தும் ''இயேசு'' என்னும் பெயரில் அடங்கியுள்ளன.

கிறிஸ்துவின் பிறப்புக் காலம் கன்னித் தாயின் பெருவிழாவாகவும் இருக்கின்றது. மரியாள் பற்றிய உண்மை அவள் இறைவனுக்குத் தாயானமையில் முழுமையாக வெளிப்படுகின்றது மீட்பு வரலாற்றில் அதுவே அவளது பங்கானது.

''இயேசு'' என்னும் திருப்பெயரில் அடங்கியுள்ளவை எல்லாம் ஒரு விசேட விதத்தில் மரியாளைக் குறிக்கின்றன. ''மீட்டும் இறைவன்'' ஒன்பது மாதம் அவளது உதரத்தில் தங்கியிருந்தார். மரியாளின் தாய்மை முழுமையாக பரிசுத்த ஆவியின் செயலாகும். பரிசுத்த ஆவியின் வல்லமையால் தனது தாய்மையோடு கூட தன் கன்னிமையையும் காத்துக்கொண்டாள்.

## மீட்பைக் கண்டடைய வேண்டும்

கிறிஸ்தவ பாரம்பரியத்தின்படி ஜனவரி 1ஆம்திகதி ஆரம்பிக்கும் ஒவ்வொரு ஆண்டும் இறைவனது காலத்தின் நிறைவினது ஒரு பகுதியாக ஆண்டவரின் ஆண்டு என அழைக்கப்படுகிறது.

இந்த ஆண்டவரின் ஆண்டில் திருத்தந்தை தமது சகோதரர்களுக்குக் கூறக்கூடிய வாழ்த்துரை என்ன? இயேசு என்னும் திருப்பெயரின் ஆற்றலில் அனைத்து மக்களும் பங்குகொண்டு, உண்மையை உணர்ந்து திருமகனில் மீட்பைக் கண்டடைய வேண்டும் என்பதைவிட வேறென்னவாக அது இருக்கமுடியும்.

இது தனிநபர், சமூகம் ஆகிய மனித வாழ்வின் சகல பரிமாணங்களிலும் நிகழ வேண்டும்.

திருச்சபைச் செய்தியைத் தரும் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வாரப்பத்திரிகை

பாதுகாவலன்
PATHUKAVALAN

# க.பொ.த. (சாதாரணம்) பரீட்சைக்கு மீன்பிடித் தொழில்

''வீடமைப்பு, சமூகநலன், சல்வி வசதிகளை மீனவருக்கு அளிப்பதுடன் க.பொ.த. (சாதாரணம்) பரீட்சைக்கு மீன்பிடித்தொழிலை ஒருபாடமாக்கவும் அரசு தீர்மானித்துள்ளது'' என கலபூல்லை சமூக சமய நிலையத்தில் நடந்த கருத்தரங்கொன்றில் மின்சக்தி ராஜாங்க அமைச்சர் திரு மேவின் கூறே கூறினார்.

''விவசாயக் குடியேற்றவாசிகளுக்கு வளமான காணிகளும், வீடுகளும் அளிக்கப்படுகின்றன. ஆனால் மீனவர் குடிசைகளில் வாழ்கின்றனர் அவர்கள் முயற்சியும், விவேகமும் உள்ளவர்களாயிருந்தாலும் வசதிக் குறைவுகளால் முன்னேற்றமடைய முடியாதிருக்கின்றது'' என கருத்தரங்கை ஏற்பாடு செய்த திரு. நிமல் சரத்சந்திர கூறினார்.

## தாதியர் மகத்தான சேவை

''அன்பு, தயவு, ஏற்புணர்வு என்பவற்றின் மூலம் வலுச்சண்டைக்காரரையும் கட்டுப்படுத்தலாம். அதேபோல் இந்நற்பண்புகளின் மூலம் நோய் வாய்ப்பட்டோருக்கு நம்பிக்கையையும், வாழும் ஊக்கத்தையும் ஊட்டமுடியும். இந்நற்பண்புகளையுடைய தாதிகள் நோயாளருக்கு மகத்தான சேவையாற்ற முடியும். அத்தகைய ஒருவர் தனது தொழிலில் நிறைவு காண முடியும்.''

இவ்வாறு அ.ம.தி. மாநில அதிபரான வண பிதா. கமிலஸ் பெர்னாண்டோ கத்தோலிக்க தாதியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கூறினார். மேலும் அவர் நோயாளருக்கு துறவறக் கன்னியரும், வைத்தியசாலைக் குருவான பிதா குளோட் லோரன்ஸ் அ.ம.தி. அவர்களும் ஆற்றிய சேவையைப் பாராட்டினார்.

ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு சங்கத்தின் புதிய நிர்வாகிகள்தெரிவுசெய்யப்பட்டனர்.

## வாசக துண்டுப்பிரசுரமும் நடமாடும் கண்காட்சியும்

யாழ். திருவழிபாட்டு நடுநிலையம் தனது பணித்திட்டத்தில் மக்கள் அர்த்தமுள்ள முறையில் வழிபாடுகளில் பங்குகொள்வதற்கு உதவியாக ஞாயிறு திருப்பலி வாசகங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை அச்சடித்து வினியோகிக்கிறது. இதன் மூலம் இறைமக்கள் திருப்பலிக்கொண்டாட்டத்திற்கு வரும்பொழுது வழிபாட்டின் மையக் கருத்துக்களை தியானிக்க வழிசெய்யப்படுகிறது.

'வாழ்வும் வழிபாடும்' என்ற தலைப்பில் நடமாடும் கண்காட்சி ஒன்றை நடத்துவதற்கு நிலையம் ஆயத்தம் செய்கின்றது. அதற்கு பாடசாலை மாணவர்கள் மத்தியில் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இதற்கான விபரங்கள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். திருவழிபாடுபற்றிய வினா — விடைப்பகுதி ''பாதுகாவலன்'' பத்திரிகையில் தொடர்ச்சியாக இடம் பெறவுள்ளது. அதனால் திருவழிபாடு பற்றிய சந்தேகங்களுக்குரிய கேள்விகளை இயக்குனர், திருவழிபாட்டு நிலையம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

## ஆயர் நியமனம் குறித்து ஆர்ப்பாட்டம்

(சார் செய்தி)

திருச்சியின் புதிய ஆயர் லாரன்ஸ் கபிரியேல் திருநிலைப் படுத்தப்பட்டபோது அதனை எதிர்த்து சுமார் 750 தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆர்ப்பாட்டம் செய்து திருநிலைப்படுத்தல் சடங்கை நிறைவேற்றிய கருதினால் லூர்துசாமிக்குக் கறுப்புக் கொடி காட்டினர்.

ஆனால் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி அளிக்காத பொலிசார் கூட்டத்தினரைக் கைது செய்து காவலில் வைத்தனர்.

தமிழ்நாட்டில் தாம் 75 வீதத்தினராக இருக்கும்போது தமது வகுப்பிலிருந்து ஆயர் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே அவர்களது முறைப்பாடாகும்.

காவலில் வைக்கப்பட்டவர்கள் புரட்சிப் பாடல்கள் பாடி, சொற்பொழிவாற்றி தமது ஆத்திரத்தை வெளியிட்டனர்.

இவற்றை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த காவல் துறையினரிடம் இவர்கள் வன்முறையில் ஈடுபடக்கூடுமா என்று வினாவப்பட்ட பொழுது, அவர்கள் மிகக் கட்டுப்பாட்டுடனே நடந்து கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

அன்று தாழ்த்தப்பட்ட வகுப்பு கிறிஸ்தவ இயக்கத்தினர் பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை கருதினால் லூர்துசாமிக்கும், தமிழ்நாடு ஆயர் பேரவைத் தலைவர் ஆயர் ஞானாதிக்கத்துக்கும் அளித்து தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் தாம் திருச்சடங்குகளைப் பகிஷ்கரிக்கப் போவதாகக் கூறியுள்ளனர்.

## குடிசன மதிப்பீட்டின்போது கிறிஸ்தவர்களாகப் பதிய வேண்டுகோள்

(சார் செய்தி)

அனைத்திந்திய கத்தோலிக்க சங்கம் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த எல்லாக் கிறிஸ்தவர்களையும், 1991ஆம் ஆண்டு குடிசனக் கணக்கெடுப்பின்போது, தம்மைக் கிறிஸ்தவர்களாகப் பதியும்படி பிரசாரம் செய்துவருகிறது.

தற்போதுள்ள அரசாங்கப் பதிவில் கிறிஸ்தவர்களின் தொகை திருச்சபையின் புள்ளி விபரத்திலிருந்து வேறுபடுகிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் பலர் தாம் அரசினால் அளிக்கப்படும் சலுகைகளை இழந்துவிடக்கூடும் என்று அஞ்சி தம்மை இந்துக்கள் என பதிவு செய்வதே இதற்குக் காரணம் என நம்பப்படுகிறது

ஆகவே எதிர்வரும் கணக்கெடுப்பில் சரியான தகவல்களை அளித்து கிறிஸ்தவர்களின் ஒருமைப்பாட்டைக் காட்டுமாறு தாழ்த்தப்பட்ட வகுப்பினரைக் கேட்டுள்ளதுடன், பல மொழிகளிலும் துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டு குடிக்கணக்கெடுப்பின் முக்கியத்துவத்தை விளக்குமாறு ஆயர்களையும், பிற கத்தோலிக்க இயக்கங்களையும் இச்சங்கம் கேட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட வகுப்பு இந்துக்களுக்கும், பிற மதத்தினருக்கும் அளிக்கப்பட்டு வரும் சலுகைகள் கிறிஸ்தவர்களுக்கு அளிக்கப்படுவதில்லை. இந்த உரிமைகளைப் பெறுவதற்காக திருச்சபை நீண்டகாலமாகப் போராடி வருகின்றது.

## வீட்டுப்பணியாளர் பற்றிய சட்டமூலம்

இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் நீதி சமாதான ஆணைக்குழு வீட்டுப்பணியாளர் குறித்து வெளியிட்ட ஒரு அறிக்கையையொட்டி தயாரிக்கப்பட்ட சட்டமூலத்தை இந்திய அரசு மாநில அரசுகளுக்கு அனுப்பி அவர்களது அபிப்பிராயத்தை அறிய முனைந்துள்ளது.

இளம் கிறிஸ்தவ தொழிலாளரின் வழிகாட்டிகள் பம்பாயில் கூடிய போது வீட்டுப் பணியாளர் மத்தியிலும் பணி செய்ய மேலும் பல கன்னியர்கள் தேவைப்படுவதாகக் கூறப்பட்டது. கிறிஸ்தவ தொழிலாளர் தலைவர்களைப் பயிற்றுவதற்கு திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

## இனவிகிதாசார முறை தள்ளுபடி பற்றி கருத்து

(சார் செய்தி)

இலங்கை உயர்நீதிமன்றம் கடந்த ஜனவரி 7 ஆம் திகதியன்று அடிப்படை உரிமைகள் பற்றிய முறையீடு ஒன்றை ஏற்று ஆட்சேர்ப்பு. பதவி உயர்வு ஆகியவற்றில் அரசாங்கம் கடைப்பிடித்து வரும் இனவிகிதாசார முறையைத் தள்ளுபடி செய்ததென இந்தியாவிலிருந்து வெளி வரும் சார் (S.A.R.) செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. சரிந்த ரணசிங்க தலைமையிலான ஏழு பேரைக் கொண்ட நடுவர் குழு, ஓர் சுங்க அதிகாரியான திரு. பி. ராமுப்பிள்ளையின் முறையீட்டை ஏற்றுக் கொண்டது.

தமது திணைக்களத்தில் 53 அதிகாரிகள் பதவி உயர்வுக்கு விண்ணப்பித்திருந்தனர் என்றும், இனவிகிதாசார முறையின்படி 19 சிங்களவரும் 3 தமிழருமே அதில் தெரியப்படுவர் என்பதால் சேவை அடிப்படையில் தாம் பத்தாவதாக இருந்தும், ஐந்தாவது தமிழராக இருந்தபடியால் தமக்குப் பதவி உயர்வுபெறும் சாத்தியம் இல்லாது போயிற்று என்றும் இதனால் தமது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதாகவும் திரு. ராமுப்பிள்ளை முறையீடு செய்திருந்தார்.

இனத்தின் காரணமாகவே ஒருவருக்குப் பதவி உயர்வு மறுக்கப்படுவது அரசியல் யாப்பின் 12 ஆவது விதிக்கு முரணானது என தீர்ப்புக் கூறிய நீதிபதி இனவிகிதாசார முறை நியமனம் பற்றி எந்தவித முடிவும் கூறவில்லை.

## சுற்றுமடலின் நூற்றாண்டுபற்றி திருத்தந்தை

இவ்வாண்டு திருச்சபை உலகுக்கு முக்கியமானதொரு நிகழ்ச்சியை நினைவு கூருகின்றது. தொழிலாளர் நிலைபற்றி பாப்பு 13ஆம் சிங்கராயர் ''ரேறும் நொவாறும்'' என்னும் சுற்றுமடலை வெளியிட்டமையே இந்நிகழ்ச்சி காலப் போக்கில் இதன் இறைவாக்கு முக்கியத்துவம் உறுதிப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியானது, 1991ஆம் ஆண்டில் திருச்சபையின் சமூகக் கோட்பாட்டில் கவனம் செலுத்துமாறு அழைக்கின்றது. ஆகவே இவ்வாண்டை திருச்சபையின் சமூகக் கோட்பாட்டு ஆண்டாகப் பிரகடனம் செய்து, சமூக விடயங்களில் திருச்சபையின் போதனையை நன்குணர்ந்து, அதனை மலரச் செய்து பரப்புமாறு விசுவாசிகளை அழைக்கின்றேன். எனது முன்னோர் எழுதிய ஏட்டை இன்றைய நிலைமைகளுக்கும், பிரச்சினைகளுக்கும் ஏற்றவண்ணம் காலத்துக்குப் பொருந்துவதாக்கும்படிக்கு ஒரு சுற்றுமடலை வெளியிடும் செய்தியையும் உங்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

## போரினால் பொதுமக்களுக்குப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வளைகுடாப் போர் பற்றி ஆலோசிக்க திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் மார்ச் 4, 5 திகதிகளில் சிறப்புக் கூட்டம் ஒன்றை கூட்டவிருக்கிறார். இக்கூட்டத்தில் வளைகுடாப்போரில் ஈடுபட்டுள்ள நேச நாடுகளின் ஆயர் பேரவைத் தலைவர்களும், ஈராக்கின் பிதா பிதாக்களும் வத்திக்கான் அதிகாரிகளும் கலந்து கொள்வர் என வத்திக்கான் அறிவித்துள்ளது.

திருத்தந்தையின் அமைதிக்கான இந்த முயற்சியை அமெரிக்க ஆயர் பேரவைத் தலைவர் பேராயர் டானியல் ஈ. பெலார்ஷிக் அவர்கள் வரவேற்றுள்ளார்.

கத்தோலிக்க தலைவர் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர். போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவியும், மருத்துவ உதவியும் வழங்கும்படி உலகு அனைத்திலுமுள்ள கத்தோலிக்கர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். கடந்த 14 நாட்களாக ஈராக் நாட்டில் காலரா நோய்க்கு சுமார் 100 பேர் பலியாகி உள்ளார்கள். மேலும் சுமார் 14,000 பேர் காலரா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என பெப். 24இல் வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் பேமஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இ.ல. QB/1001/58/81